**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.279/2020 |
| Prosecution Witness | : | அ.சா.11 |
| Name | : | குருசாமி |
| Father's/Husband Name: | : | வெங்கடப்பாஜி |
| Address : | : | 21, 4 வது சந்து, சாஸ்திரி நகர், அடையார், சென்னை-600020. |
| Age | : | 53/2023 |

தேதி: 06/07/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.( **எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா RACPC, OMR, பெருங்குடி கிளையில் துணை பொது மேலாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் கிளை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் முதன்மை மேலாளராக பணியாற்றினேன். என்னிடம் காண்பிக்கப்படும் 07.12.2019 தேதியிட்ட கடிதம் என்னால் வழங்கப்பட்டது தான். அதை நான் கடந்த 07.12.2019 ம் தேதி நான் பணியில் இருந்த போது காவல் ஆய்வாளர் என்னிடம் சில விவரங்களை கேட்டார். அதற்கு நான் 10.07.2019 பொறுத்த வரையில், வட்டி விகிதம் 11.25% லிருந்து 13.75% வரையில் தனிநபர் கடனாக(Personal Loan) வட்டியாக வசூலிக்கப்பட்டது என நாங்கள் சான்று

வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.11 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னிடம் எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். இது குறித்து நான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் இந்த வட்டி விகிதம் அனைவருக்கும் பொதுவான வட்டி விகிதம். விசாரணை அதிகாரி அவரது வேண்டுகோள் கடிதத்துடன் வேறு ஏதாவது ஆவணங்கள் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. எனது அலுவலகத்திற்கு வந்து விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார். இந்த வட்டி விகிதம் தனிநபர் கடனுக்கானது(Personal Loan) என்றால் சரிதான். அதாவது எங்களது வங்கிக்கும் எங்களது வாடிக்கையாளருக்கும் இடையே கொடுக்கப்படும் கடனுக்கு இந்த வட்டி வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வங்கி இல்லாமல் தனிப்பட்ட நபர்கள் பெற்று கொள்ளும் கடனுக்கு இந்த வட்டி விகிதம் பொருந்துமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் 07.02.2019 அன்று தான் இந்த கடிதத்தை வழங்கினேன். அன்றைய தினமே என்னை விசாரணை செய்தார். சாட்சி தானாக 29.11.2019 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என கூறுகிறார்.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Judicial

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.272/2020 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | குருசாமி |
| Father's/Husband Name: | : | வெங்கடப்பாஜி |
| Address : | : | 21, 4 வது சந்து, சாஸ்திரி நகர், அடையார், சென்னை-600020. |
| Age | : | 53/2023 |

தேதி: 06/07/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.( **எதிரி ஆஜர்** )

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா RACPC, OMR, பெருங்குடி கிளையில் துணை பொது மேலாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் கிளை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் முதன்மை மேலாளராக பணியாற்றினேன். என்னிடம் காண்பிக்கப்படும் 07.12.2019 தேதியிட்ட கடிதம் என்னால் வழங்கப்பட்டது தான். அதை நான் கடந்த 07.12.2019 ம் தேதி நான் பணியில் இருந்த போது காவல் ஆய்வாளர் என்னிடம் சில விவரங்களை கேட்டார். அதற்கு நான் 2007-2017 ம் ஆண்டில் 11.05% லிருந்து 16.05% வரையில் தனிநபர் கடனாக(Personal Loan) வட்டியாக வசூலிக்கப்பட்டது என நாங்கள் சான்று வழங்கினோம். அந்த

கடிதம் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை எனது அலுவலகத்திற்கு வந்து விசாரணை செய்தார். இந்த வட்டி விகிதம் தனிநபர் கடனுக்கானது(Personal Loan) என்றால் சரிதான். அதாவது எங்களது வங்கிக்கும் எங்களது வாடிக்கையாளருக்கும் இடையே கொடுக்கப்படும் கடனுக்கு இந்த வட்டி வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வங்கி இல்லாமல் தனிப்பட்ட நபர்கள் பெற்று கொள்ளும் கடனுக்கு இந்த வட்டி விகிதம் பொருந்துமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

CVAP Judi